# ஊடக அறிவித்தல்
# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2026
# தனியார் வகுப்புக்கள் நடாத்துவதைத் தடை செய்தல்

பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும் புலமைப்பரிசில் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2026 எதிர்வரும் 09 ஆம் திகதி ஓகஸ்ட் மாதம் 2026 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 2723 பரீட்சை நிலையங்களில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12.08.2015 ஆம் திகதியும் 1927/49 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தம் செய்யப்பட்ட 1968ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைக்கமைவாக, பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும் புலமைப்பரிசில் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சையுடன் தொடர்புடைய விதத்தில் 05.08.2026 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி தொடக்கம் பரீட்சை முழுமையாக நிறைவடையும் வரை பின்வருவன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

- பரீட்சார்த்திகளுக்காக தனியார் வகுப்புக்களை ஏற்பாடு செய்தலும் நடாத்துதலும்
- பாடம் தொடர்பான விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துதல்
- மேற்படி பரீட்சையின் ஊக வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரங்களை அச்சிடலும் அவற்றை விநியோகித்தலும்
- பரீட்சை வினாப்பத்திரத்திலுள்ள வினாக்களைத் தருவதாகவோ அல்லது அதற்குச் சமமான வினாக்களை வழங்குவதாகவோ சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள், இலத்திரனியல்/ அச்சு ஊடகங்கள் மூலமோ சமூக வலைத்தளங்கள் மூலமோ பிரசுரித்தல் அல்லது அவ்வாறானவற்றை தம்வசம் வைத்திருத்தல்

யாரேனும் ஒருவரோ, நிறுவனமோ, வேறு தரப்பினரோ இக்கட்டளையை கவனத்திற் கொள்ளாமல் செயற்படின் அந்நபர் அல்லது அந்நிறுவனம் அல்லது அத்தரப்பினர் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாவர். யாரேனும் ஒருவரோ, நிறுவனமோ, தரப்பினரோ இக்கட்டளையை ஏதேனுமொரு விதத்தில் மீறிச் செயற்பட்டால் அது தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ பொலிஸ் தலைமையகத்திற்கோ அல்லது பரீட்சைத் திணைக்களத்திற்கோ பின்வரும் தொலைபேசி எண்கள் ஊடாக முறைப்பாடு செய்ய முடியும்.

| | |
|---|---|
| பொலிஸ் தலைமையகம் | - 0112421111 |
| பொலிஸ் அவசர அழைப்பு எண் | - 119 |
| இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நேரடி அழைப்பு எண் | - 1911 |
| பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை | - 0112784208/ 0112784537 |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே

பரீட்சை ஆணையாளர் நாயகம்

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

பெலவத்தை, பத்தரமுல்ல.

01.08.2026